உ

சிவமயம்

# திருவருள்

★ அவனருளாலே அவன்தாள் வணங்கி வாழ்வோம் ★


மலர் 1 | இந்துசமயச் சஞ்சிகை | இதழ் 4




## திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்

பேரா தரிக்கு மடியவர் தம்
பிறப்பை யொழித்துப் பெருவாழ்வும்
பேறுங் கொடுக்க வரும்பிள்ளைப்
பெருமா னெனும் பேராளா
சேரா நிருதர் குலகலகா
சேவற் கொடியாய் திருச்செந்தூர்த்
தேவா தேவர்சிறை மீட்ட
செல்வா வென்றுன் றிருமுகத்தைப்
பாரா மகிழ்ந்து முலைத்தாயர்
பரவிப் புகழ்ந்து விருப்புடனப்
பாவா வாவென் றுனைப் போற்றப்
பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்
வாரா திருக்க வழக்குண்டோ
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

— பகழிக்கூத்தர்


THIRUVARUL — A Hindu Magazine — Vol 1 No. 4

ANNUAL SUBSCRIPTION Rs. 15/-

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

—அருணகிரிநாதர்


# R. M. P. PULAMADAN Chetty & Sons Ltd.

## MEENAMBIKAI OIL MILLS

## KELANIYA.

Telegrams:
" AREMPIE "

Telephone No.
075 – 321
075 – 322

உ

சிவமயம்

# திருவருள்

அவனருளாலே அவன் தாள் வணங்கி வாழ்வோம்

| மலர் 1 | இந்து சமய சஞ்சிகை | இதழ் 4 |
|---|---|---|

## பொருளடக்கம்


| இலக்கம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | என்ன புண்ணியம் செய்தோம் – தேவாரம் ... | 1 |
| 2. | குருவாக்கியம் - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ... | 5 |
| 3. | நல்லூரான் திருவருள் - நாளும் நம்மைக் காக்கும் - க. சி. குலரத்தினம் ... | 11 |
| 4. | கந்தனுக்கு ஓர் அநுபூதி அர்ச்சனை - வே. சதாசிவம் B. A. - M. Ltt., Dip. Ed. CES. ... | 14 |
| 5. | நல்லூர் வீதியில்- யோகசுவாமிகள்... | 18 |
| 6. | யோகசாதனை- சிவஞானவாரிதி, சைவசித்தாந்த காவலர், குமாரசாமி குருசுவாமி... | 19 |
| 7. | சைவம் அந்தோ பரிதாபம்- ஜே. குப்புசாமி | 23 |
| 8. | குடிசன புள்ளி விபரங்கள் ... | 28 |
| 9. | பக்தி இலக்கியங்கள் மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் ... | 29 |
| 10. | நல்லூரான் கிருபை வேண்டும்- நற்சிந்தனை ... | 32 |
| 11, | முருகப்பெருமானும் சத்திகளும்... | 33 |

# திருவருள்

**யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்**


| | |
|---|---|
| ஆசிரியர் குழு: | திரு. V. சதாசிவம் |
| | திரு. கு. குருசுவாமி |
| | திரு. A. V. சர்மா |
| | திரு. L. P. சாமி |
| | திரு. து. சிவசுந்தரம் |
| | திரு. ம. இரத்தினசபாபதி |
| | திருமதி ம. யோகநாதன் |
| பதிப்பாளர்: | திரு. R. வைத்தமாநிதி |
| நிருவாகம்: | திரு. S. யோகநாதன் |
| | திரு. ம. கனகசபாபதி |
| | திரு. K. செல்லையா |
| விளம்பரம்: | திரு. T. M. ஆவுடையப்பன் |
| | திரு. P. பாலசுந்தரம் |
| | திரு. K. குமாரசுவாமி |
| | திரு. P. K. சந்திரசேகரம் |
| விநியோகம்: | திரு. S. பத்மநாதன் |
| | திரு. D. சுப்பிரமணியம் |
| | திரு. க. இளையதம்பி |
| | திரு. R. திருலோகசுந்தரம் |



தங்களது காசுக்கட்டளை, தபாற்கட்டளை, காசோலை ஆகியவற்றை R. வைத்தமாநிதி என்ற பெயருக்கே அனுப்பி வையுங்கள். கடிதங்கள், கட்டுரை, மற்றும் விஷயதானங்கள் ஆகியவற்றை இல. 5, கன்னரத் தெரு, கொழும்பு-13 என விலாசமிட்டு அனுப்புங்கள்.

வருட சந்தா ரூபா 15-00

உ

திருச்சிற்றம்பலம்

# என்ன புண்ணியஞ் செய்தோம்!

( திருஞானசம்பந்தர் தேவாரம் - திருவலஞ்சுழி )

திருவலஞ்சுழி மேவிய பெம்மான் புகழ் பாடியோருக்கும், பாடியதனைப் பொருள் அறிந்து கேட்டோருக்கும் இம்மை மறுமைகளில் வினைகள் வாதிக்க மாட்டா என திருஞானசம்பந்த சுவாமிகள் வலியுறுத்திக் கூறுகின்றார். இப்பதிகத்தில் இயமபயத்தினையும், இடர்தரும் பிணிநோய் களையும் நீக்கும் மருந்தும் மந்திரமும் ஆகிய இறைவன் இணைகழல்களைப் போற்றும் இதுபோன்ற பல தோத்திரங்களைப் பாடிப்பரவும் நிலை பெற்ற நாம் அனைவரும் உண்மையிலேயே புண்ணியஞ் செய்தவர்களே.

பண்—நட்டராகம்

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே
 யிருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை
 முழு மணித்தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
 வரணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும்
 வழிபடும் அதனாலே. 1

விண்டொ ழிந்தன நம்முடை வல்வினை
 விரிகடல் வருநஞ்சம்
உண்டி றைஞ்சுவா னவர்தமைத் தாங்கிய
 இறைவனை உலகத்தில்
வண்டு வாழ்குழல் மங்கையொர் பங்கனை
 வலஞ்சுழி யிடமாகக்
கொண்ட நாதன்மெய்த் தொழில்புரி தொண்டரோ
 டினிதிருந் தமையாலே. 2

திருந்த லார்புரந் தீயெழச் செறுவன
விறலின்கண் அடியாரைப்
பரிந்து காப்பன பத்தியில் வருவன
மத்தமாம் பிணி
நோய்க்கு மருந்து மாவன மந்திரமாவன
வலஞ்சுழி யிடமாக
இருந்த நாயகன் இமையவ ரேத்திய
இணையடித் தலந்தானே. 3

கறைகொள் கண்டத்தார் காய்கதிர் நிறுத்தினர்
அறத்திற முனிவர்க்கன்
றிறைவ ராலிடை நீழலி லிருந்துகந்
தினிதருள் பெருமானார்
மறைக ளோதுவர் வருபுனல் வலஞ்சுழியிடம்
மகிழ்ந் தருங்கானத்
தறைக ழல்சிலம் பார்க்கநின் றாடிய
அற்புதம் அறியோமே. 4

மண்ணர் நீரர்விண் காற்றின ராற்றலாம்
எரியுரு வொருபாகம்
பெண்ண ராணெனத் தெரிவரு வடிவினர்
பெருங்கடற் பவளம்போல்
வண்ணராகிலும் வலஞ்சுழி பிரிகிலார் பரிபவர்
மனம் புக்க
எண்ண ராகிலும் எனைப்பல இயம்புவர்
இணையடி தொழுவாரே. 5

ஒருவ ராலுவ மிப்பதை ரியதோர்
மேனியர் மடமாதர்
இருவ ராதரிப் பார்பல பூதமும்
பேய்களும் அடையாளம்
அருவரா ததோர் வெண்டலை கைப்பிடித்
தகந்தொறும் பலிக்கென்று
வருவரேலவர் வலஞ்சுழி யடிகளே
வரிவளை கவர்ந்தாரே. 6

குன்றி யூர்குட மூக்கிடம் வலம்புரங்
குலவிய நெய்த்தானம்
என்றிவ் வூர்களி லோமென்றும் இயம்புவர்
இமையவர் பணிகேட்பார்
அன்றி யூர்தமக் குள்ளன அறிகிலோம்
வலஞ்சுழி யரனூர்பால்
சென்ற வூர்தனில் தலைப்பட லாமென்று
சேயிழை தளர்வாமே. 7

குயிலின் நேர்மொழிக் கொடியிடை வெருவுறக்
குலவரைப் பரப்பாய
கயிலை யைப்பிடித் தெடுத்தவன் கதிர்முடி
தோளிரு பதுமூன்றி
மயிலின் நேரன சாயலோ டமர்ந்தவன்
வலஞ்சுழி யெம்மானைப்
பயில வல்லவர் பரகதி காண்பவர்
அல்லவர் காணாரே. 8

அழல தோம்பிய அலர்மிசை அண்ணலும்
அரவணைத் துயின்றானும்
கழலுஞ் சென்னியுங் காண்பரி தாயவர்
மாண்பமர் தடக்கையில்
மழலை வீணையர் மகிழ்திரு வலஞ்சுழி
வலங்கொடு பாதத்தால்
சுழலு மாந்தர்கள் தொல்வினை யதனொடு
துன்பங்கள் களைவாரே. 9

அறிவி லாதவன் சமணர்கள் சாக்கியர்
தவம்புரிந்தவஞ் செய்வார்
நெறிய லாதன கூறுவர் மற்றவை
தேறன்மின் மாறுநீர்
மறியு லாந்திரைக் காவிரி வலஞ்சுழி
மருவிய பெருமானைப்
பிறிவி லாதவர் பெறுகதி பேசிடில்
அளவறுப் பொண்ணாதே. 10

மாதொர் கூறனை வலஞ்சுழி மருவிய
மருந்தினை வயற்காழி
நாதன் வேதியன் ஞானசம் பந்தன்வாய்
நவிற்றிய தமிழ்மாலை
ஆத ரித்திசை கற்றுவல் லார்சொலக்
கேட்டுகந்தவர் தம்மை
வாதி யாவினை மறுமைக்கும் இம்மைக்கும்
வருத்தம்வந் தடையாவே. 11

திருச்சிற்றம்பலம்

# இறைவன் கொடுப்பது......?

வேண்டுவார் வேண்டியதைத் தருபவன் இறைவன் என்கிறோம். ஆனல் சில நேரங்களில் இறைவன் அன்பர் வேண்டியதைக் கொடுப்பதில்லை. அவருக்கு எது வேண்டுமென அவன் திருவுள்ளமோ அதையே கொடுக்கின்ருன். இதற்காக இறைவனைத் திட்டுவோரும் உளர்.

மலேசியாவில் நடக்கும் புகழ்பெற்ற மாரியம்மன் உற்சவத்தில் ஆறுமைல் தூரத்தை கடும் வெயிலையும் பொருட்படுத்தாது சுவாமியை எடுத்துச் செல்வார்கள். இவ்வாறு செய்யும் அடியார்களுக்கு அம்பாள் வேண்டியதைக் கொடுப்பாள் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை. ஒருமுறை ஒரு சீன அன்பர் பயபக்தியுடன், கடும் வெயிலில் சுவாமியைக் காவி வருவதைக் கண்டு வியப்புற்ற நான் அவரது வேண்டுதலைப் பற்றிக் கேட்டேன். அவர் தனக்குக் கடந்த இரண்டு வருடங்களாக வியாபாரம் இல்லை. இனிமேலாவது பல்கிப் பெருகி நடக்க வேண்டும் எனப் பிரார்த்தனை செய்துள்ளதாகக் கூறினர். என்ன வியாபாரம் எனக் கேட்டதும் நான் திடுக்கிட்டேன். அவ்வன்பர் ஒரு சவப்பெட்டி வியாபாரி!

-தெல்லிப்பழை சைவசித்தாந்த மகாநாட்டில் ஒரு மலேசிய அன்பர்.

உ

கணபதி துணை

# குரு வாக்கியம்

நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் இயற்றியது

தாரணஹ 1884 - 1885

(ஆசாரியர் சிஷ்யருக்கு சமயதீக்ஷை செய்யும்போது போதிக்கத்தக்கது)

நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களால் எழுதப்பெற்று அச்சேறப்படாது இருந்த குருவாக்கியம் என்னும் கட்டுரை இலண்டன் பழஞ்சுவடிச்சாலையில் தஞ்சம் அடைந்துவிட்டது. அன்பர் V. முத்துக்குமாரசுவாமி அவர்கள் அதனைக் கண்டுபிடித்து மீண்டும் சைவ உலகிற்கு உபகரித்துள்ளார்கள். அவருக்கு சைவ உலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

திருவருளில் இக்கட்டுரையை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

அன்பர்களே!

ஆன்மாக்களுக்கு எந்தச் சரீரத்திலும் மனிதசரீரங் கிடைப்பது மிக அரிது; மனித சரீரங் கிடைத்தாலும், சைவ சமயம் வழங்குந் தேசத்திலே பிறக்கக் கிடைப்பது, அதினும் மிக அரிது; சைவசமயம் வழங்குந் தேசத்திலே பிறக்கக் கிடைத்தாலும் சைவசமயத்திலே பிரவேசிக்கக் கிடைப்பது அதினும் மிக அரிது. சைவசமயத்தை அனுட்டித்து முத்தியின்பம் பெறும் பொருட்டே மனிதசரீரங் கிடைத்தது.

சைவசமயம் என்பதற்கு பொருள் சிவபெருமானை வழிபடுமார்க்கம். சிவபெருமான் பிறப்பிறப்பின்றி என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், இயல்பாகவே எல்லாம் அறிபவர், எல்லாஞ் செய்யவல்லவர், தமது அனுபவத்தின் பொருட்டுப் பிறிதொன்றையும் வேண்டாதவர், பிறர் வசத்தினராகாததும் தம்வசத்தினராயே உள்ளவர், பசுக்களாகிய உயிர்களிடத்துள்ள இரக்கமே திருமேனியாக உடையவர். இவ்விலக்கணங்களெல்லாம் உடையவர் சிவபெருமானேயன்றி வேறில்லை, ஆதலால் சிவபெருமான் ஒருவரே பசுக்களுக்குப் பதி. சிவபெருமானிலும் உயர்ந்தவர் உண்டென்றுவது சிவபெருமானுக்குச் சமத்துவம் உண்டென்றுவது கொள்வது சிவநிந்தை. இவ்வுண்மையெல்லாம் அறிந்து சிவபெருமான் ஒருவரையே வழிபடுஞ் சமயம் சைவசமயம்.

பசுபதியாகிய சிவபெருமானை வழிபடுநெறியையும், சிவபெருமானுடைய ஏவல்வழி ஒழுகும் பசுக்களாகிய தேவர்களை வழிபடுநெறியையும் அறிவிக்கும் பொதுநூல் வேதம். சிவபெருமானை வழிபடு நெறியையே விரித்து அறிவிக்குஞ் சிறப்பு நூல் சிவாகமம். சிவபெருமானை வழிபடுதற்கு யோக்கியதையைப் பிறப்பிப்பது சிவதீக்ஷை.

சிவபெருமானுடைய அடையாளங்கள் விபூதி, உருத்திராக்ஷம். சிவபெருமானுடைய மூலமந்திரம் ஸ்ரீபஞ்சாக்ஷரம். சிவபெருமானை மிக மகிழ்விக்குந் தோத்திரங்கள் தேவார திருவாசகம். சிவபெருமானை வழிபடும் இடங்கள் குருலிங்க சங்கமம். குரு என்றது தீக்ஷை செய்யும் குருவையும், சைவசமய நூலைப் படிப்பிக்குங் குருவையும், சங்கமம் என்றது சிவதீக்ஷை பெற்று விபூதி உருத்திராக்ஷந் தரித்துச் சிவாலயத்தொண்டு, சிவபூசை, சிவசாத்திரம் படித்தல் முதலியன செய்யும் சிவனடியார்களையுமாம்.

அன்பர்களே!

உங்களுக்கு மனிதசரீரங் கிடைத்தது, அம்மட்டோ? சைவசமயம் வழங்குந் தேசத்திலே பிறக்கவுங் கிடைத்துள்ளது, சிவபெருமான் உங்களுக்கு அனுக்கிரகிக்கும் பொருட்டு இங்கே இந்தக் குடும்பத்திலும், இந்த மண்டலத்திலும், இந்த

அக்கினியிலும் நம்மாலே ஆவாகித்துப் பூசிக்கப்பட்டு உங்களுக்கு அண்ணியரானார். சிவபெருமான் உங்களுக்குத் தீக்ஷையாகிய அனுக்கிரகத்தைச் செய்யும் பொருட்டு இடம் கொண்டு மறைந்து நின்று செலுத்தும் குருவடிவம் நாம். நாம் இங்கே இப்பொழுது உங்களுக்குச் சமய தீக்ஷை செய்யப் பெற்றீர்கள். இந்தச் சமய தீக்ஷை வாயிலாக நீங்கள் சைவசமயத்திலே பிரவேசித்தீர்கள். விபூதியை மந்திரத்தோடு தரிக்கப்பெற்றீர்கள்.

ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை நாம் உபதேசிக்கப் பெற்றீர்கள். தேவார திருவாசகம் ஓத அதிகாரம் பெற்றீர்கள். குருலிங்க சங்கமங்களுக்குத் தொண்டு செய்ய உரிமை பெற்றீர்கள். எல்லா வகையாலும் பசுபதியாகிய சிவபெருமானுக்கே அடிமை பூண்டீர்கள்.

இனி மரணபரியந்தம் அனுட்டிக்கலாகாத கருமங்கள் எவை, அனுட்டிக்கத்தக்க கருமங்கள் எவை என்று நீங்கள் நன்றாக ஆராய்ந்து அறிந்து கொள்ளல் வேண்டும். அனுட்டிக்கலாகாத கருமங்களை மரணபரியந்தம் விலக்கிவிட வேண்டும்.

அனுட்டிக்கத்தக்க கருமங்களை மரணபரியந்தம் அனுட்டித்தல் வேண்டும்.

பெரும்பான்மையுக் எல்லாச்சமயத்தாரும் விலக்கத்தக்க பாதகங்கள் உயிர்க்கொலை, களவு, கள்ளுண்ணல், மற்சமாமிசம் புசித்தல், பொய், வியபிசாரம் முதலியவைகள். இவைகளை நீங்கள் ஒருபொழுதுஞ் செய்யலாகாது.

பிதா, மாதா முதலிய பெரியோர்களை ஒரு சிறிதும் அவமதியாது எந்நாளும் மிக்க மரியாதைசெய்து பாதுகாத்து நடத்தல் வேண்டும். வறியவர்களாயுந் தொழில் செய்து சீவனஞ்செய்ய வல்லமை இல்லாதவர்களாயும் உள்ள கூனர், குருடர், மூடவர், வியாதியாளர், கிழவர் இவர்

களுக்குச் சமயம் வாய்க்கும் பொழுது உங்களாலே கூடிய உதவிசெய்தல் வேண்டும். உங்களுக்குத் தீமை செய்தவர்களுக்கும் நீங்கள் நன்மையே செய்தல் வேண்டும். இவையெல்லாம் எல்லாச் சமயத்தாருக்கும் வேண்டப்படும் தருமங்கள்.

சிவநிந்தை, குருநிந்தை, சிவனடியார் நிந்தை, சிவத்திரவியத்தைக் குருத்திரவியத்தை உபயோகித்தல் முதலாயின அதிபாதகங்களாகிய சிவத்துரோகங்கள். இவைகளை நீங்கள் மறந்துஞ் செய்யாது மரண பரியந்தஞ் சாவதானமாக இருத்தல் வேண்டும்.

நியமமாக நாடோறும் அனுட்டானஞ்செய்து சிவ பெருமானைத் தியானித்து ஸ்ரீபஞ்சாக்ஷரத்தில் இயன்ற உருச்செபித்துச் சிவபெருமானைத் தோத்திரம் செய்தல் வேண்டும். பெண்கள் வீட்டுக்கு விலக்கானல் மூன்று நாளும் பஞ்சாக்ஷரத்தை மனதினுலே சிந்தித்தல் வேண்டும். நாலாநாள் ஸ்ஞானம் செய்தபின் அனுட்டானம் பண்ணலாம்.

விபூதி நெற்றியில் எப்பொழுதுந் தரித்துக் கொள்ளல் வேண்டும். கீழே சிந்தாவண்ணம் அண்ணாந்து சிவ சிவ என்று சொல்லி வலக்கையின் நடுவிரல் மூன்றினலும் தரித்தல் வேண்டும். விபூதி தரியாத முகம் சுடுகாட்டுக்குச் சமம். ஆதலால் விபூதி தரித்துக்கொண்டே புறத்திற் புறப்படல் வேண்டும்.

தினந்தோறுமாவது புண்ணியகாலங்களிலாவது திருக்கோயிலுக்குப் போய்ச் சிவலிங்கப் பெருமானைத் தரிசித்து வணங்கி வலம் வந்து துதித்தல் வேண்டும். உங்களாலே கூடிய பொழுது திருக்கோயிலிலே சுகந்த தூபமிடுங்கள், திருவிளக்கேற்றுங்கள், திருமெழுக்கிடுங்கள், திருநந்தவனம் வையுங்கள், சூரியோதயத்துக்கு முன் புஷ்பமெடுத்துத் திருமாலை கட்டிக்கொடுங்கள்; திருவீதியில் உள்ள புல்லைச் செருக்குங்கள்.

குருவையுஞ் சிவனடியார்களையுங் கண்டால் உடனே இருக்கை விட்டெழுந்து கும்பிட்டு நமஸ்காரஞ் செய்யுங்கள்; அவர்களெதிரே இருக்குமுறை அறிந்து இருங்கள். பேசும் முறையறிந்து பேசுங்கள். அவர்களை எவராயினுங் குற்றம் பேசினால் உடனே காதைப் பொத்திக்கொண்டு அவ்விடத்தி னின்றும் போய்விடுங்கள்.

சிவபெருமானின் வேறாகாத திருவருள் என்கின்ற சிவசக்தியே பார்வதிதேவியார் ஆதலால் அவரை வழிபடுவது சிவ பெருமானை வழிபடுவதேயாம். புண்ணியஞ் செய்தவர்களுக்கு அனுக்கிரகமும் பாவஞ் செய்தவர்களுக்கு நிக்கிரகமுஞ் செய்யும் பொருட்டுச் சிவபெருமான் கருணையினாலே கொண் டருளிய மூர்த்தங்கள் அவருடைய திருக்குமாரர்கள் எனப்படு கிற விநாயகக்கடவுள், சுப்பிரமணியக்கடவுள், வைரவக் கடவுள், வீரபத்திரக்கடவுள் ஆதலால் அவர்களை வழிபடுவது சிவபெருமானை வழிபடுவதேயாகும். குருவினிடத்தும் சிவனடியாரிடத்தும் சிவசின்னமும் சிவமந்திரமும் சிவ நாமமும் சிவமகிமையும் சிவசாத்திரமும் விளங்கக் காண் டலினால் அவர்களை வழிபடுவதும் யாம் சிவபெருமானை வழிபடுவதே. இப்படியன்றி உயிர்ப்பலியேற்குந் துட்ட தேவதைகளையும் வீரன், மாடன், கறுப்பன் முதலிய பிசாசு களையும் வணங்கலாகாது. வணங்குவீர்களேயானால் சிவ பெருமானுடைய சாபம் தப்பாமற் கிடைக்கும்.

தேவார, திருவாசகத் திருமுறையையும் சிவபுராணத் திருமுறையையும் மடியிலாவது நிலத்திலாவது ஆசனத்தி லாவது சயனத்திலாவது வைக்கலாகாது. பீடத்திலாவது, பட்டுப் பரிவட்டத்திலாவது, காவிப் பரிவட்டத்திலாவது வைத்தல் வேண்டும்.

திருக்கோயிலிலாவது திருமடத்திலாவது தேவார திரு வாசகம் ஓதப்படும் பொழுதும், சைவப்பிரசங்கம் செய்யப் படும் பொழுதும், சிவபுராணம் படிக்கப்படும் பொழுதும் நீங்கள் போய்ச் சிரத்தையோடு கேட்டல் வேண்டும்.

நீங்கள் ஓரோர் காலத்து அறிந்தேனும் அறியாதேனும் அனுட்டிக்கலாகாத கருமங்களை அனுட்டித்தாலும், அனுட்டிக்கத்தக்க கருமங்களை அனுட்டியாதொழிந்தாலும், மனம் பதைபதைத்துக் குருவை அடைந்து விண்ணப்பஞ் செய்து குருமுன்னிலையாக பிராயச்சித்தஞ் செய்து கொள்ளல் வேண்டும். பிராயச்சித்தமாவது செய்த பாவத்தைப் போக்கும் வாயில் பெறுதற்கரிய மனித சரீரமும் சைவசமயப் பிறப்பும் சைவசமயப் பிரவேசமும் பெற்ற நீங்கள் இவை வீண் போகா வண்ணம் நாம் இங்கே போதித்தபடி ஒழுகிச் சிவபெருமானுடைய திருவருளைப் பெற்று வாழக்கடவீர்கள்.

திருச்சிற்றம்பலம்

நன்றி:- இந்துசாதனம்

# உண்மைச் சைவன்

ஒருமுறை யாழ்ப்பாணம் இந்துமகாசபைக் கூட்டமொன்றில் உண்மைச் சைவனின் வரைவிலக்கணம் கூற முயன்று பெரிதும் இடர்ப்பட்டார் ஒரு பேச்சாளர். "விபூதி உருத்திராக்கம் அணிவோராய், சிவதீக்ஷை பெற்றோராய்...." என நீட்டிக்கொண்டு போனார் அவர். இன்னொருவர் அதைக் குறுக்கினார். தலைவர் தமது அருகில் இருந்த பண்டிதமணியின் கருத்தைக் கேட்டார். அவர் மெல்ல எழுந்து மெலிந்த குரலில், ஆபரகாம் லிங்கன் கடைப்பெடியனாக "இருந்து சீனி விற்ற கதையைச் சொல்லி" உறக்கக் கலக்கத்தில் ஒரு இருத்தல் சீனிக்குப் பணம் வாங்கிக்கொண்டு, அரை இருத்தல் கொடுத்தமைக்கு வருந்தி, ஊர் முழுவதும் தேடி உரியவரிடம் மற்ற அரை இருத்தலையும் கொடுத்த பின்னரே கடை திறந்த அவன் ஜனாதிபதியாய் — ஒருநாள் — சைவனாய் வந்திருக்கலாம் என்றார். இதனைக் கேட்ட அன்பர் ஒருவர் "இவர் எதிக்ஸ் பேசுகிறார்" 'எதிக்ஸ்' (சமூகநீதி) வேறு, சமயம் வேறு என்றார். "பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் இவை வெவ்வேறாக இருக்கலாம். ஆனால் சைவநெறியில் நிற்க எண்ணுபவனுக்கு அவை வேறல்ல. தர்மத்தை விலக்கி ஒரு ஞானமுமில்லை" என்றார் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ★

உ



# நல்லூரான் திருவருள் நாளும் நம்மைக் காக்கும்

—: க. சி. குலரத்தினம் :—

செந்தமிழறிவு குன்றிய காலத்தில் சேனாதிராய முதலியார் நல்லூரில் அலுவலகம் அமைத்துச் செந்தமிழணங்கு அங்கே திருநடம் புரியவைத்தார் என்பர். சேனாதிராய முதலியார் பன்மொழிகளறிந்த அரசாங்கப் பெருமுத்தியோகத்தர். இருபாலையூரினர். நினைவாற்றலுக்குப் பெயர்போன நெல்லைநாத முதலியாரின் மைந்தர். கனகசபாபதியோகி என்னும் திருக்கைலாய பரம்பரைத் திருவண்ணாமலை யாதீனத்துக் கூழங்கைத்தம்பிரான் சுவாமிகளின் மாணாக்கன். ஆறுமுக நாவலரின் குரு.

நல்லூர் முருகனைத்தம் குலதெய்வமாகக்கொண்டு வணங்கி அவர் பெயரில் பல பிரபந்தங்களைப் பக்திச்சுவை நனிசொட்டப் பாடியவர். அவர் பாடிய ஊஞ்சலும் கலி வெண்பாவும் நல்லூர்த் திருக்கோயிலிற் பாடப்பெற்று வந்தன. இன்றும் சிலசமயங்களிற் பாடப்பெறுவன.

புறவிருளை நீக்குவதற்கு விடியற்காலையில் உதயஞ் செய்யும் சூரியனைப் போல அன்பர் அடியவர்களின் அகவிருள் நீங்க எழுந்தருளும் முருகப்பெருமான், பொன்னமராவதியெனப் புகழ்பெறும் நல்லூரிலும் எழுந்தருளியுள்ளார். அவரின் ஞானசத்தியின் அருளாற்றல் சொல்லுந்தரத்ததன்று. அதனைக் கண்டு வணங்கியுருகினவர்களுக்கே அதன் திருவருட் பெருமை விளங்கும். அதுநாளும் நம்மைக் காத்தருள் செய்வதை நாமறியாதே இருக்கிறோம்.

"உலகுபுகழ்தரு ஞாயிறு ஒருகோடி யுதித்தன பேரொளியி னோங்கி
இலகு திருமுகமாறுங் கருணைபொழி இருவிழியு மீராறு தோளும்
குலவுவடி நெடுவேலு நல்லைநகர்க் குமரேசன் கோலமாண்பும்
நிலவுதிரு வடிமலரும் தொழுது மலமாயை வினைநீங்கி வாழ்வாம்"

என்று தென்கோவை முருகேசபிள்ளை நாற்பதாண்டுகளுக்கு முன் பாடியமை நினைவுக்கு வருகிறது. நல்லூர் முருகப்பெருமான் திருவடித்தாமரை மலர்கள் மனமொழிமெய் என்னும் திரிகரணங்களால் வணங்குவோருக்கு காரியசித்தியுண்டாவதில் ஐயமில்லை.

சேனாதிராய முதலியார் நல்லூர் முருகன்மீது நல்லை வெண்பா, நல்லைக்குறவஞ்சி, நல்லைக் கலிவெண்பா, ஊஞ்சல் முதலிய பிரபந்தங்கள் பாடியுள்ளார். நல்லூரான் அடியார்களின் பிறவிப் புன்மையிருளைப் போக்குபவராதலால் நாற்றிசைகளிலுமிருந்து அவரைப் போற்றியவாறே அன்பர்கள் ஈண்டிப் பெருந்தொகையினராகத் தொழுது நிற்கின்றனர்.

நன்கணமமைந்த நகரமொன்றை நல்லூர் என வழங்குதல் காரண இடுகுறிப்பெயர் என்ப. ஆனால் முருகன் எழுந்தருளியுள்ள இந்த நல்லூர் காரணஇடுகுறிப் பெயராய் அமைந்துள்ளது என்பர் சேனாதிராச முதலியார். நல்லூர் சிவனையொத்தது, உமாதேவியாரையொத்தது, கரிமுகக்கடவுளையொத்தது, தெய்வயானையம்மாரையொத்தது, வள்ளியம்மையாரை ஒத்தது, திருமாலையொத்தது, பிரமதேவனையொத்தது, இந்திரனை ஒத்தது, அகத்தியரை ஒத்தது, இலக்குமியை ஒத்தது, நாமகளையொத்தது என்றெல்லாம் சிலேடை நயம் ததும்பச் சேனாதிராய முதலியார் பாடியுள்ளார்.

அறிவாற்றல் நிறைந்த புலவர்களும், செட்டிமாரும் நெருக்கமாக வாழ்ந்தகாலம் பத்தொன்பதாம் நூற்றாண்டோடு கழிந்தது. "தேக்கும் புலவருடன் சீரகத்தார் மார்பினரும்" எனப்பாடும் புலவர் செட்டிமார் சீரகமாலையினர் எனச் செப்புவர்.

நல்லூரில் வேதவொலி, வேள்வியொலி, மிக்கவிழாவொலி, கடலொலியை நாணச் செய்தன என்பர். முருகப்பெருமான் எழுந்தருளும் படைவீடுகள் அத்தனையும் பெற்ற பெரும்புகழும் புனிதமும் நல்லூருக்கு உண்டென்பர். இத்தகைய நல்லூரிற் சைவம் பொலிக, தமிழ் தழைக்க என வாழ்த்திய புலவர், மெய்ஞ்ஞானிகள், முனிவர்கள் கொடுக்கின்ற அவிப்பாகத்தை ஏற்றருள் செய்கின்ற முருகப்பெருமான், வேட்டுவர்கள் அன்போடு படைக்கின்ற தினைமாவை

யும் விருப்பத்தோடு ஏற்றருள் செய்வர் என்பர். எனவே ஒன்றுக்கும் பற்றாத எம்போலியர் நிவேதனத்தையும் ஏற்று எமக்கு வாழ்வு வழங்குவர் என்பர். எனவே நாமும் புலவர் சொன்ன வழியில் பொய், களவு, காமம், ஆசை, பொறாமை முதலியவற்றைச் சிதறு தேங்காய் என அடித்து உள்ளத் தூய்மையுடன் வணங்குவோமாக. சேனாதிராய முதலியார் காலத்தில் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியாண்டுகளில் நல்லூர்க் கந்தன்மீது கிள்ளைவிடுதூது பாடிய சந்திரசேகர பண்டிதர் என்பார் அவ்வூரில் வாழ்ந்த நாராயண பட்டரின் மைந்தர் என்ப. ஆன்மாவாகிய தலைவி ஆன்மநாயகனான தலைவன் முருகனிடம் தன்னிலைமை சொல்லியனுப்பிய அருமையான பிரபந்தம் இந்தக் கிள்ளைவிடுதூது.

ஆறுமுகநாவலர் அவர்களின் தந்தையும், சேனாதிராய முதலியாரின் நண்பரும் பன்மொழிப் புலவரும் கச்சேரியில் ஆராய்ச்சி உத்தியோகம் வகித்தவருமான பரமானந்தர் கந்தர் என்பார் நல்லைநகர்க் குறவஞ்சி பாடி நல்லூரானை ஏத்தியுள்ளார்.

கந்தரின் மூத்த மைந்தன் பரமானந்தர் நொத்தாரிசு வேலை பார்த்தவாறே நல்லூரிற் கைலாசபிள்ளையார் கோயிலடியில் வாழ்ந்து, நல்லூரை வணங்கி அருள் பெற்றவர். இவர் செய்த நல்லைக்கந்தரகவல், நல்லைக்கந்தர் கீர்த்தனம் என்பன பக்திச் சுவையும் தமிழ்நயமுந் ததும்புவன. திருமாலும் பிரமனுந் தேடியுங் காணாக் கருணைவாரிதியான சிவபெருமானின் கருணையில் விளைந்தவர் முருகப்பெருமான் எனும் ஆறுமுதென்பர். ''உன்னையே தெய்வம் என உளத்துள் துணிந்தனன். அன்னது துணிந்தேற்கு உன்னதுபாரம்" என்று சரணாகதியடைந்தவர். நாமும் சரணாகதியடைந்து அருள்பெறுவோமாக. ஆறுமுகநாவலரவர்கள் நல்லூர் முருகனை நாளுந் தொழுது, கந்தபுராண படனஞ்செய்து, வாழி விருத்தமும் பாடி மகிழ்ந்தவர். ''தருணமிதுவென அமரர் பணிநல்லையமர் கந்தர் தமதடியர் நிதமும் வாழி" என முருகனடியார்களாகிய எம்மையும் வாழ்த்தி எமக்கு முருகப்பெருமானின் ஆறெழுத்து மந்திரமே கதியென்று சடாட்சரத்தையும் வாழ்த்தியுள்ளார். அது நம்மைக் காக்கும்.

உ



# கந்தனுக்கு ஓர் அநுபூதி அர்ச்சனை

வே. சதாசிவம்
(B. A. M. Litt. Dip. Ed., CES.)
[ முன்னாள் உதவிப் பரீட்சை ஆணையாளர் ]

"வெற்றி வடிவேலன் அவனுடை வீரத்தினைப் புகழ்வோம்
சுற்றி நில்லாதே போ பகையே! துள்ளி வருகுது வேல்"

— சுப்பிரமணிய பாரதியார்.

இறைவனுடைய திருநாமம் ஒவ்வொன்றினையும் மனமாரக் கருத்தூன்றி நினைந்து அவ்வத் தெய்வத்துக்குரிய மலர் தூபம், வில்வபத்திரம், குங்குமம், மங்கலவரிசி தூவி ஓதி வழிபடுதல் அர்ச்சனையாகும். இவ்வாறு செய்யப்பெறும் அர்ச்சனை தெய்வ வழிபாட்டில் ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது. திருவருள் பெறவரும் அடியவர்களுக்காகக் கோயிலில் காசுக்காகச் செய்யப்படும் அர்ச்சனையைவிட ஒவ்வொருவரும் நினைந்து காதலாகிக் கசிந்து உருகி தாமாகவே பொருளுணர்ந்து செய்யக்கூடிய அர்ச்சனையே ஈசனுவக்கும் அர்ச்சனையாகும். கோவில்களில் செய்யப்படுவது மந்திரத்தன்மை வாய்ந்தது எனப்படும் சமஸ்கிருதச் சொற்களால் வரிசைப் படுத்திய திருநாமங்களைக் கொண்ட நாமாவளியாகும். எல்லா மக்களும் பொருளுணர்ந்து கும்பிட முடியாத பாஷைப்பிரச்சனை ஒருபக்கம், சிலர் பலப்பலருக்காகச் செய்யும் பயனற்ற கடுகதி அர்ச்சனை ஒருபக்கம்; பலருடைய பெயர்களை சீட்டுகளின்படி உரத்துக் கூறிவிட்டு, எல்லாருக்கும் பொதுவாக ஒரு தடவை அர்ச்சனை செய்து தீபாராதனை காட்டிக் கண்துடைப்பதொரு பக்கம். இக்காலத்திற்கேற்பவுள்ள விசாரணைக்கு இது ஏற்றதா? எவ்வாறு பொருந்தும்? எனவே பொருளுணர்ந்து சொல்லக்கூடியதும் தாமேசெய்யக்கூடியதுமான அவரவர் தாய் மொழிப் பெயர்களாக நாமாவளி இருப்பின் சிந்தித்துப் பொருளுணரும் காலத்திற்கேற்பப் பயனுள்ளதாகும். இந்தப் பின்

னணியில் நல்லூர்க் கந்தனின் தாள்களை வணக்கத்துடன் பிடித்து அநுபூதிமான் அருணகிரிநாதரின் ஆட்சியில் மந்திர சக்திபெற்ற அர்ச்சனைக்கான திருப்பெயர்களின் வரிசை இத் திருவருள் மலரில் இடம் பெறுகிறது.

கந்தவேளின் தனிக்கருணைக்குப் பாத்திரமான தெய்வீக புருஷரான அருணகிரிநாதருக்கு ஒப்பாரும் மிக்காரும் இலர் என்றே கூறலாம். மும்மூர்த்திகளும் தாளுகி அவர்க்கு மேலுமாகி எல்லாமுமாகி நின்ற தத்துவமே முருகன் எனவும் எல்லாத் தெய்வங்களும் முருகன் என்பதுமே அருணகிரியாரின் துணிபு. இதனை, ''ஐயா அருணகிரி! அப்பா! உனைப் போல் மெய்யாக ஓர் சொல் விளம்பினர் யார்?" என நிரம்பிய அன்பு ததும்ப உணர்ச்சிப் பரவசத்துடன் போற்றிப் புகழ்வர் தாயுமானவர். அருணகிரியாரின் அநுபூதி முத்திரை பதிந்த திருப்புகழ், திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரநுபூதி, வேல்விருத்தம், மயில்விருத்தம் என்றபடைப்புகளில்கந்தரநுபூதியே இவ்வநுபூதி அர்ச்சனைக்குஆதாரமாயிற்று. காப்புப்பாடல் நீங்கலாக ஐம்பத்தொரு பாடல்கள் கந்தர் அநுபூதியில் அடங்கியுள்ளன. அதில் முருகப்பெருமானை முருகா! குமரா! சுரபூபதியே! எனக்கூவியழைத்து நேயத்துடன் நேரில் பேசுபவர் அருணகிரியார். ஓர் ஒழுங்குமுறையில் விளிவாசகங்களாக, வரிசைக்கிரமமாக கந்தரநுபூதியில் வரும் திருப்பெயர்கள் ஓர் அஷ்டோத்தரசத அர்ச்சனைக்கு வேண்டிய எண்ணிக்கையில் ஒன்று குறையக் காணப்படுவன. தலத்துப் பெயரையும் சேர்த்து இக்குறைவினை நிறைவாக்கினல் நல்லூரானின் அர்ச்சனை மாலையாகிறது. அவ்வத்தலத்துப் பெயரினையும் அடியில் சேர்த்துக்கொள்ளக் கூடியதான திருவருள் குறைப்பு பெருநிறைவினையே தருகிறது. எல்லாம் திருவருள்!

[ ''ஒரு பொல்லாப்புமில்லை'' ''இது எப்பவோ முடிந்தகாரியம்'' என்பர் யோகர்சுவாமிகள்.]

நிட்டுர, நிராகுல போன்ற சமஸ்கிருதப் பெயர்களும் சுரபூபதியே, வேலவனே, கருணுகரனே போன்ற தமிழ் வழக்குப் பெயர்களும் அருணகிரிநாதரின் நாவில் களிநடம் புரிவன. தீவிரவாத தனித் தமிழ்ப் பெயர்கள் மாத்திரமே கொள்

கைக்கு இடங்கொடாமல் சமஸ்கிருதப் பெயர்களும் விரவிவருவதனுல் இவ்வநுபூதி அர்ச்சனை வளம்பெறுகின்றது. மதிப்புக்கொடுக்கும் இப்போக்கு அக்கால வழக்குமாகும். இந்த நாமாவளியிலுள்ள ஒவ்வொரு வரியிலும் ஓம் எனும் பிரணவம் முதலிலும் நம என்றபதம் ஈற்றிலும் வருவது ஒரு உச்சாடன சத்தியைக் கொடுக்கிறது. நம என்ற பதம் பொருள் நமம; என்னுடையதல்ல எனவும் பொருள்படுவதாகக் கூறுவர். மமகாரம் என்ற புறப்பற்றினை அறவே நீத்து தெய்வத்தின் திருத்தாளினைட் பணிவதாகவுள்ள கருத்து வரவேற்கத்தக்கது. எனவே, ஓம் நம: என்ற இரண்டு பதங்கள் முதலும், ஈறுமாக இடைநடுவில் வரவுள்ள திருநாமங்கள் வரிசைப்பட வருவது இக்காலத்துக்கேற்பவுள்ள முற்போக்கு நெறியாகும். இவ்வழிபற்றிச் செல்லும் அநுபூதி நாம அர்ச்சனையை ஒவ்வொரு முருகபத்தரும் தத்தம் இல்லங்களில் பொருளுணர்ந்து நறுமலர் தூவி சில நிமிடங்கள் ஓதக்கூடியதாக நல்லூர்க் கந்தனின் விழாக்காலத்தில் அச்சேறுவது முருகன் திருவருளே! பொருளுணர்ந்து உச்சரித்து ஓதிப் பயன்பெறுக.


யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்.

## கந்தனுக்கு ஓர் அநுபூதி அர்ச்சனை

ஓம் யானைசகோதரனே நம
ஓம் முருகா நம
ஓம் சுரபூபதியே நம
ஓம் சண்முகனே நம
ஓம் வேலவனே நம 5
ஓம் தயாபரனே நம
ஓம் தானவநாசகனே நம
ஓம் நிட்டூரா நம
ஓம் நிராகுலா நம
ஓம் நிர்ப்பயனே நம 10
ஓம் வேலவனே நம
ஓம் நகாசல நம
ஓம் வேலவா நம
ஓம் நாலு கவித் தியாகா நம
ஓம் சுரலோக சிகாமணியே நம 15
ஓம் குருபுங்கவ நம
ஓம் குணபஞ்சரனே நம
ஓம் வீரா நம
ஓம் வேல் எறியும் சூரா நம
ஓம் சுரலோக துரந்தரனே நம 20
ஓம் விமலன் புதல்வா நம
ஓம் அதிகா நம
ஓம் அநகா நம
ஓம் அபயா நம
ஓம் அமராவதி காவலா நம 25
ஓம் சூர பயங்கரனே நம
ஓம் வேலரசே நம
ஓம் விரிதாரணா நம
ஓம் விக்ரம நம
ஓம் வேள் நம 30

ஓம் இமையோர்புரிதாரக நம
ஓம் நாகபுரந்தரனே நம
ஓம் வரதா நம
ஓம் முருகா நம
ஓம் மயில்வாகனனே நம 35
ஓம் விரதா நம
ஓம் அசுர சூர விபாடணனே நம
ஓம் வேல் மகிபா நம
ஓம் குணபூதரனே நம
ஓம் பேரர் வேல நம 40
ஓம் புரந்தர பூபதியே நம
ஓம் செய்யோய் நம
ஓம் மயில் ஏறிய சேவகனே நம
ஓம் வேதாகம நம
ஓம் ஞானவிநோத நம 45
ஓம் மனோதீதா நம
ஓம் சுரலோக சிகாமணியே நம
ஓம் பொன்னே நம
ஓம் மணியே நம
ஓம் பொருளே நம 50
ஓம் அருளே நம
ஓம் மன்னே நம
ஓம் மயில் ஏறிய வானவனே நம
ஓம் ஆறு அமுதே நம
ஓம் வேல் அரசே நம 55
ஓம் ஞானகரனே நம
ஓம் சுடர் வேலவனே நம
ஓம் மயில்வாகனனே நம
ஓம் மலையே நம
ஓம் வாகையனே நம 60
ஓம் மந்தாகினி தந்த
வரோதயனே நம
ஓம் கந்தா நம
ஓம் முருகா நம
ஓம் கருணாகரனே நம
ஓம் சங்க்ராம சிகாவல நம 65
ஓம் சண்முகனே நம
ஓம் கங்காநதிபால நம
ஓம் க்ருபாகரனே நம
ஓம் விரதா நம
ஓம் சுரபூபதியே நம 70
ஓம் நாதா நம
ஓம் குமரா நம
ஓம் மலர்ப்பாதா நம
ஓம் குறமின்பத சேகரனே நம
ஓம் ஆள் நம 75
ஓம் கிராதகுலிக்கிறைவா நம
ஓம் புகழ்வேலவனே நம
ஓம் கோவே நம
ஓம் கொடிதோள் புணரும்
தேவே நம
ஓம் சிவசங்கரதேசிகனே நம 80
ஓம் வாகா நம
ஓம் முருகா நம
ஓம் மயில்வாகனனே நம
ஓம் யோகா நம
ஓம் சிவஞானோபதேசிகனே நம 85
ஓம் நேசா நம
ஓம் முருகா நம
ஓம் கமழும் கழலே நம
ஓம் சூரவா நம
ஓம் குமரா நம 90
ஓம் குலிசாயுத நம
ஓம் குஞ்சரவா நம
ஓம் சிவயோக நம
ஓம் தயாபரனே நம
ஓம் கந்தா நம 95
ஓம் கதிர்வேலவனே நம
ஓம் உமையாள் மைந்தா நம
ஓம் குமரா நம
ஓம் மறைநாயகனே நம
ஓம் குளிர்வித்தவனே நம 100
ஓம் வேலவனே நம
ஓம் கதிர்வேல வீகிர்தா நம
ஓம் க்ருபைசூழ் சுடரே நம
ஓம் நதிபுத்திர நம
ஓம் ஞான சகாரிபத நம
ஓம் வீறு அடு சேவகனே நம
ஓம் குகனே நம
ஓம் நல்லூர்க் கந்தனே நம. 107

உ
முருகன் துணை





# நல்லூர் வீதியில்

இராகம் : பிலஹரி　　　　தாளம் : ரூபகம்

பல்லவி

எந்நாளும் நல்லூரை வலம்வந்து வணங்கினால்
இடர்கள் எல்லோம் போமே

அனுபல்லவி

அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்தஇடம்
அதுவாத லாலே அதிசயம் மெத்த உண்டு (எந்நாளும்)

சரணம்

வேதாந்த சித்தாந்தம் கற்றதனா லென்ன
வேடிக்கைக் கதைகள் பேசினா லென்ன
வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே (எந்நாளும்)

சத்தியம் பொறுமை சாந்தம் அடக்கம்
நித்தியா நித்தியந் தெரியும் நிபுணர்
பத்திசெய் உத்தமர் பரவும்நல் லூரில்
நித்தியம் வந்துபார்த்தால் முத்திநிச்சயமே (எந்நாளும்)

— யோகசுவாமிகள்

# யோக சாதனை

(சிவஞானவாரிதி, சைவசித்தாந்த காவலர்
குமாரசுவாமி குருசுவாமி)

யோகநெறி நின்று இறைவனுடைய திருவருளை அடைவதற்குக் குரு இன்றியமையாதவராகின்றார். குருவினுடைய உபதேசமும் நெறியாள்கையுமின்றி யோகநெறி நிற்றல் மிகவும் கடினமானதொன்றாகும். பிராணயாமம் முதலான ஆரம்பநெறிகளைக் குருவிடமிருந்தே கற்றறிதல் வேண்டும். பிராணயாமத்தின்போது மூச்சுக்காற்றினை உள்ளே இழுத்தல், அடக்கல், வெளியே விடுதல் ஆகியவற்றை முறையாகப் பழகுதற்குக் குருமூலம் தொடங்குவது சாலச் சிறந்தது. பிராணயாமம் சரியாகப் பயின்றுகொண்ட ஒருவர்தான் ஏனைய யோகசாதனைகளைச் செய்வதற்குத் தகுதி உடையவராகின்றார்.

"ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள அளப்பரும் கரணங்கள் நான்கும், சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும் திருந்துசாத் துவிகமே ஆக" இறைவழிபாடு செய்யவேண்டிய தன் தன்மைகள் பெரியபுராணத்திலே பேசப்படுகிறது. மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பஞ்சப்புலன்களினது செயற்பாட்டினையும் அடக்கி, அந்தக் கரணங்களாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கினையும் வகையாகக் கட்டுப்படுத்தி இராசதம், தாமதம், சாத்வீகம் ஆகிய முக்குணங்களையும் சாத்வீக நெறிநிற்கச் செய்து; இடைகலை, பிங்கலை என்னும் இருநாடிகளையும் அடைத்துச் சுழிமுனை நாடிவழியாக மூலாதாரத்திலிருந்து குண்டலினி சக்தியை எழுப்பி ஆறு ஆதாரங்களிலும் இருத்தி மூலாதாரத்தில் விநாயகரையும், சுவாதிஷ்டானத்தில் பிரமாவையும், மணிபூரகத்தில் விஷ்ணுவையும், அநாகதத்தில் உருத்திரனையும், விசுத்தியில் மகேஸ்வரனையும், ஆஞ்ஞையில் சதாசிவனையும் வழிபாடு செய்து ஆறு ஆதாரங்களையும் கடந்து ஏழாவதாகிய சகஸ்ராரம் என்று சொல்லப்படுகின்ற சிதாகாசமாகிய சிதம்பரத்திலே அனவரதமும் ஆனந்தத் தாண்டவம் செய்தருளுகின்ற நடராஜப்பெருமானது சிலம்பொலி கேட்கும் ஆனந்தம்

பெற்று ஆயிரம் இதழ்களுடன் பொலியும் சகஸ்சாரத்திலுள்ள அமிர்தமண்டலத்தில் முட்டி அந்த அமிர்தத்தினைப் பருகி வரும் அனுபவத்தினைப் பெற்ற ஆன்மாக்கள் சிவசாருப்பிய பதவியினைப் பெற்றுச் சிவருத்திரராகத் திகழ்வர்.

மூச்சுக்காற்றினைத் தம்பனஞ்செய்து மூலாதாரத்திலிருந்து குண்டலினி சக்தியை எழுப்பும்போது ஏதாவது தவறுதல் ஏற்படுமேயானால் மிகப்பாரதூரமான விளைவினை ஏற்படுத்திவிடும். காற்றினை அடக்கும்போது குருவினுடைய முன்னிலையிலிருந்து உடல் நிலையில் ஏற்படும் மாறுதல்களை உடனுக்குடன் குருவிற்குத் தெரிவித்தல் வேண்டும். அவ்விதம் யோக சாதனையில் சித்தியெய்தியவர்களுக்கு அட்டாங்கயோகமும் சுலபமாக வந்து சேரும். அந்த யோககலை கைகூடியவர்கள் அணிமா—அணுப்போலச் சிறிய வடிவமெடுத்தல், மகிமா—மலைபோல மிகப்பெரிய வடிவமெடுத்தல், லகிமா—பஞ்சிலும் இலகுவான தோற்றமெடுத்தல், கரிமா — மிகவும் கனமான தோற்றமெடுத்தல், பிராத்தி—நினைத்த விடத்திற்கு நினைத்தவுடன் போதல், பிரகாமியம்—நினைந்த இன்பத்தை நினைத்த போது அனுபவித்தல், ஈசத்துவம் -யாவர்க்கும் தலைவனாக இருத்தல், வசித்துவம் யாவரையும் தன்வசமாக்குதல் ஆகிய எட்டுச் சித்திகளும் பொருந்தியவராகத் திகழ்வர். இந்தச் சித்துக்களுடன் திருப்தி கண்டவர்கள் திருவருளைப் பெறுவதில்லை. இந்தச் சித்துக்கள் யோகசாதனையின் பெறுபேறுகளேயன்றி முடிந்த முடிபன்று.

யோகசாதனையின் முடிபாகத்திகழ்வது இறைவனுடைய திருவருளைப் பெறுவதுதான். இதனைமிகத் தெளிவாக்கிய தாயுமான சுவாமிகள் "கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம், கரடி வெம்புலியையும் கட்டலாம் ........" என்னும் பாடலிலே "சிந்தையை அடக்கியே சும்மாவிருக்கும் திறனரிது" என்று குறிப்பிடுகிறார்.

மனஒடுக்கத்தின் மூலமாகப் பஞ்சேந்திரியங்களையும் கட்டுப்படுத்தி ஆன்மாவைச் சுழிமுனை நாடிக்கும் அப்பாலே கொண்டுபோய் அமிர்தமண்டலத்தில் அமிர்தத்தைச் சுவைக்க வைத்த யோகசாதனை புரிந்தவர் யமனுடைய அதிகாரத்திற்கு உட்பட்டவர் ஆகார்.

யமனுடைய ஆதிக்கம் பஞ்சப்புலன்களுக்கு உட்பட்டதா கும். ஆன்மா உடலைவிட்டுப் பிரியும் காலத்து, யமனுடைய தூதுவராலே கவர்ந்து செல்லப்படுவதாயின் கண்களினூடாக வோ, காதுகளினூடாகவோ, நாசிகளினூடாகவோ, வாயினூ டாகவோ அன்றிச் சலவாசல், மலவாசலூடாகவோ நீங்கு வதை அருகில் இருப்பவர் உடன் அறிந்து சொல்வர்.

சுழிமுனைநாடிக் கப்பாலாகி ஆஞ்ஞை கடந்து அமிர்த மண்டலத்தில் சுகித்திருக்கும் ஆன்மா யோகநிலை கைகூடிய தாகச் சமாதியில் நிட்டையிலிருக்கும் வாய்ப்புப் பெறுகிறது. அந்த நிட்டை கைகூடியவர்களே சிவசாரூப்பிய நிலையெய்தி யவராவர். அவர்களுக்கு உச்சி துடிக்கும். பிறந்த குழந்தை யினுடைய உச்சி துடிப்பதுபோல உச்சி மிகவும் மென்மை யடைந்த தன்மையோடும் கூடிய ஆன்மாக்கள் சமாதிநிலையில் ஆன்மா உச்சியைப் பிளந்துகொண்டு செல்லும் ஆற்றலுடை யதாகும் போது, சிவானுபூதிச் செல்வராயமைந்து விட்ட காரணத்தினலே உடலூறு எதுவும் இன்றி, வருத்தம் எதுவு மின்றி, நோய், துன்பம் எதுவுமின்றிச் சமாதிநிலை கைகூடப் பெற்றவராகி இறைஇன்பத்தில் என்றும் திளைத்திருப்பர். அவர்கள் அட்டமாசித்திகளும் முன்பே கைவரப்பெற்றவர் களாவர். அட்டமாசித்திகளும் கைவரப்பெறாதவர் யோகசாத னையில் நிறைவு பெறாதவராவர். யோகசாதனை நிறைவு பெறாத வர்களுக்குச் சமாதிநிலை கைகூடமாட்டாது.

யோகநிலை என்றால் என்ன என்று தெரியாதவர்கள் யோகத் திற்கும் சமாதிகட்டி சைவத்திற்கும் சமாதிகட்டி விடுவர்.

மூக்கு ணம்புல னைந்துட னடக்கி
மூல வாயுவை யெழுப்பிரு வழியைச்
சிக்கெ னும்படி யடைத்தொரு வழியைத்
திறந்து தாண்டவச் சிலம்பொலி யுடன்போய்த்
தக்க வஞ்செழுத் தோரெழுத் துருவாந்
தன்மை கண்டரு டரும்பெரு வெளிக்கே
புக்க ழுந்தின ரெமதுருப் பெறுவார்
புவியில் வேட்டுவ னெடுத்தமென் புழுப்போல்.

என்னும் திருவாதவூரடிகள் புராணத்தின் 109-ம் பாடலில் யோகசாதனையின் தன்மை நன்றாக விளங்கப்படுத்தப்பட்டது.

யோகசாதனையின் திறன் கந்தபுராணத்திலே வள்ளிதிருமணப்படலத்திலே நன்கு விளக்கப்படுத்தப்பட்டது. முருகப்பெருமான் வள்ளிமலையிலே வள்ளியினிடத்துச் சென்று தேனும் தினைமாவும் உண்டு விக்கியதன் காரணமாக நீர் விடாயினால் வருந்தினார். ஆறுமலை தாண்டி அப்பாலுள்ள சுனையில் நீர் இருக்கிறது என்கிறாள் வள்ளி. உடனே முருகன் "தான் தனை வருத்தும் என்று தாழ்த்தலை" என்று கூறி வள்ளியே ஆறு மலைக்கு அப்பால் உள்ள சுனையைக் காட்டவேண்டும் என்று கேட்கிறார். ஆறு ஆதாரங்களாகிய மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்னும் ஆறு மலைகளையும் கடந்ததன்பின் துரியம் கடந்த துரியாதீத நிலையில் உள்ள சுனையே அமிர்தமண்டலம் என யோகசாதனையில் குறிப்பிடப்படுகிறது. இந்த அமிர்தமண்டலத்தில் சஞ்சாரம் செய்யும் ஆன்மா மீண்டும் பூவுலகத்தில் பிறவி எடுப்பதில்லை. யமவாதைக்குட் படுவதில்லை. உலகத்தில் வேண்டிய யாவற்றையும் வேண்டியவாறு பெறும் ஆற்றல் உடையதாகிறது.

அவ்விதமான யோகநிலை கைவரப்பெற்ற ஆன்மாக்களே சமாதிநிலை கூட்டும் ஆற்றல் பெற்றனவாகின்றன. இவ்விதமான பெருமைகளுக்கெல்லாம் உரிய ஆன்மாக்கள் குருமுகூர்த்தமாகவே சிறப்புநிலை அடைகின்றன. ஆதலின் யோகமார்க்கத்திற் சிறந்த மார்க்கம் வேறில்லை.

## அட்டயோகங்களாவன

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆதனம் | .... | உண்மை உணர்வு |
| 2. | இயமம் | .... | புலனடக்கம் |
| 3. | சமாதி | .... | தன்னை உணர்தல் |
| 4. | தாரணை | ... | வாயுவைக் கும்பனம் செய்தல் |
| 5. | தியானம் | ... | சிவத்தியானம் செய்தல் |
| 6. | நியமம் | .... | ஒழுங்காக யோகநிலைநிற்றல் |
| 7. | பிரத்தியாகாரம் | .... | உபாதியை நீக்கி உள்நோக்கல் |
| 8. | பிராணயாமம் | .... | பிராண வாயுவை இழுத்து (இரேசக) அடக்கி (பூரக) வெளியே விடுதல் (கும்பகம்) |

# சைவம் - அந்தோ பரிதாபம்!

— ஜே. குப்புசாமி —

அண்மைக் காலத்தில் சைவப்பெருமக்களுக்கு அதிர்ச்சி தரும் செய்திகள் பல திசைகளில் இருந்தும் கிடைத்த வண்ணம் இருக்கின்றன. இவற்றில் மிகவும் பிரதானமானது மத மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது என்பதேயாகும். இந்தச் செய்திகளைக் கேட்டு எவ்வித அக்கறையும் இல்லாமல் வாளா இருக்கின்றனர் பலர். "ஏதோ எல்லாம் அவன் செயல்" என்று நமக்கே உரித்தான சமாதானத்தைக் கூறித் தம் போக்கில் செல்லுகின்றனர் பலர். "இதை எப்படித் தடுப்பது" என்று மனதில் உணர்ச்சி பொங்க ஆனல் செயற்பட வழியில்லாமல் திணறுகின்றனர் பலர்.

ஏதாவது செய்து ஆகவேண்டுமே! நம்மால் முடிந்தது, நம்மை நாமே கட்டுப்படுத்துவது தான். நம்மை என்றால், ஒருவர் தன்னையும் தன் குடும்பத்தையும், சுற்றத்தாரையும் சமூகத்தையும், குறிப்பாக நம் சமயத்தவர் அனைவரையும் தன்னடக்கத்துடன் காந்தி வழியில் கட்டுப்படுத்துவது எனக் கொள்ளவேண்டும். ஆக, ஆரம்பம் தன்னிலே அடங்கி இருக்கிறது.

நாம் வணங்கும் இறைவனை எந்நாட்டவர்க்கும் இறைவன் என்கிறோம். ஆனல் தற்போதைய அதிசயம் என்னவென்றால், நம்மவர்களே அவனை விட்டுச் செல்லுகிறார்கள். "இவ்வாறான நடப்புகளுக்குக் காரணம் என்ன?" என்கிற பெரிய கேள்வி எழுகிறது.

மனக்கட்டுப்பாடு என்று நாம் முன்பு கூறியது தனி மனிதனின் முக்திக்கு உரிய சாதனங்களில் ஒன்றாகும். ஆனல் ஒரு சமூகத்தை நல்வழியிலிருந்து பிறழாது பாதுகாக்கப் பல புறக்கட்டுப்பாடுகளும் தேவை. இதை முன்னிட்டே நம் முன்னோர்கள் இமயம் முதல் தெய்வேந்திரமுனை வரை கோயில்களை எழுப்பி வைத்தார்கள். மடங்கள் அமைத்

தார்கள். சன்மார்க்கச் சங்கங்கள் அமைத்தார்கள். மிஷன் களையும் சபைகளையும் அமைத்தார்கள். இவை யாவும் சன் மார்க்கங்களை வகுத்து நடைமுறைப்படுத்தி சமூக வாழ்க் கையோடு சமய வாழ்க்கையைக் கலக்க வைப்பதையே குறிக் கோளாகக் கொண்டவை. இப்பெருங்காரியம் பலகாலமாக நடைபெற்றன. அப்படி என்ருல் அதை தலைமுறை தலை முறையாகப் பாதுகாக்க என்ன பாடுபட வேண்டும். இப்பொழுது நாம் பாடுபடுகிறோமில்லை. கனியிருப் பக் காய்கவர்தல் போன்று இது வேறு ஒரு கருத்தில் கூறப்பட்டது. ஆனால் நம்முடைய இன்றைய நிலைக்கும் பொருந்தும், எப்படி? நாகரிகம் தோன்றும்பொழுது அதோடு தோன்றியது சிவதத்துவம். மொட்டாகி மலராகி பிஞ்சாகிக் காயாகி இன்று பழுத்த நிலை எய்தி விட்டது சைவம். இவ்வி தம் பழுத்த பழம் இருக்க ஏன் நம்மவர்கள் காய்களை நோக் கிச்செல்லுகிருர்கள்? ஒன்று அவர்களுக்குப் பழங்கள் எட்ட வில்லை. அல்லது நாம் அதைப் பாதுகாக்காமல் கெட்டுப் போக விட்டுக்கொண்டிருக்கிறோம். ஆங்கிலத்தில் 'செய்யா மல் இருப்பதைவிட தாமதித்தேனும் செய்வதுமேல்' என் பார்கள். இன்று நம்மிடம் பெரிய பொறுப்புக்கள் ஒப்ப டைக்கப்பட்டிருக்கின்றன. முதலாவது சைவப்பழத்தை எல்லோர்க்கும் கிடைக்கும்படி செய்வது. மற்றையது அது அக்கறையின்மையால் கெட்டுப்போகாமல் பாதுகாப்பது. இவற்றை இன்று நாம் செய்யத் தவறிவிட்டால், மலை அடி வாரத்தில் ஏற்படும் மண்சரிவு நாளடைவில் மலையையே அழித்து விடுவதுபோல இன்னும் சிலநூற்ருண்டுகளில் இங்கு சிவதத்துவமே இல்லாமற் போய்விடும். இதற்கு உதார ணங்கள் மேற்கே நோக்கினுல் தெரியும். உரோம நாகரீகம், கிரேக்க நாகரீகம், எகிப்திய நாகரீகம் இன்னும் பல இப் பொழுது சரித்திர ஏடுகளில் மட்டுந்தான் இருக்கின்றன. இந்நிலை நமக்கும் ஏற்பட வேண்டுமா?

உணர்ச்சி வசமாக எழுதிவிட்டு, படித்துவிட்டு, படித்ததை பேசிவிட்டால் காரியம் நடந்துவிடாது. நடைமுறை சாத்திய மாக என்ன செய்வது என்று ஒவ்வொருவரும், ஒவ்வொரு சங்கமும், மிஷனும், சபையும், மடமும், தர்மகர்த்தாக் குழு

வும் முடிவெடுத்து அதைக் கூடிய விரைவில் அமுலாக்க வேண்டும். அப்பொழுதுதான் புறக்கட்டுப்பாடு செயற்படும்.

'கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' இது ஒரு முக்கியமான கோட்பாடு ஆகும். இதற்காகக் காணி பூமி களையும் தொழில்களையும் அன்றாட வாழ்க்கையையும் விட்டு விட்டு கோவில் உள்ள ஊருக்குச் சென்று குடியேற இந் நாட்களில் முடியாது. மேலும் மைல் கணக்கில் தூர இருக் கும் கோயில்களுக்குச் செல்லவும் நேரம், பிரயாணச் செலவு முதலியன இடங்கொடா. அப்படியானால் செய்ய வேண்டி யது ஒன்றே ஒன்றுதான். நம் சைவமக்கள் எங்கெல்லாம் இருக்கின்றார்களோ எந்த மூலை முடுக்குகளானாலும் சரி இருக்கும் எண்ணிக்கைக்கும், இருப்போர் வசதிக்கும் உரிய சிறிய அல்லது பெரிய வழிபாட்டுத்தலங்கள் அமைக்க வேண் டும். தனலட்சுமியின் கடைக்கண் கடாட்சம் பெற்றோர் இம் முயற்சிகளுக்கு தாங்களே முன்வந்து உதவி செய்யவேண்டும். அப்பொழுதுதான் நாஸ்திகம் தலைதூக்காது. சமயம் எங்களைப் பாதுகாக்கும் ஆங்காங்கே கோயில்கள் பல இருக்கின்றன வசதிபடைத்தவை மேலும் மேலும் வசதியாகிக் கொண்டே போகின்றன. வசதியற்றவை நலிந்து கொண்டே போகின் றன. நாட்டில் பல பாகங்களில் சைவமக்கள் வழிபட முறை யான ஆலயங்களே கிடையாது. சில இடங்களில் பத்தாயிரம் பேருக்கு பத்துக்கோயில்களும் இருக்கின்றன. ஆனால் சில இடங்களில் இருபதினாயிரம் பேருக்கு ஒழுங்கான ஒருகோயில் கூடக் கிடையாது. இந்தநிலை மாறவேண்டும். இலங்கையில் எங்கெல்லாம் சைவமக்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் அரைமைலுக்கு ஒரு கோவில் வீதம் காணப்படவேண்டும். சமூகத்தில் சகல துறைகளிலும் முன்னணியில் இருக்கும் பெரியவர்கள் இத்தேவையை உணராமல் இல்லை. ஆனால், எல்லோரும் ஒன்றுபட்டு முறைப்படி செயலாற்ற அவன் திருவருள் கிடைக்கவில்லை போலும்!

இப்பொழுதுள்ள அரசாங்கம் சமயப் பற்றுள்ளது. நாஸ் திகர்கள் தலை எடுக்காமல் இருக்க வேண்டியன செய்யும். சைவத்தின் பிறப்பிடமாகிய பாரததேசத்திலும், மற்றும் பல

7

மேலைய நாடுகளிலும் இம்முயற்சிக்கு உதவ பல சங்கங்கள் தயாராகக் காத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் ஒன்றுக்கொன்று தொடர்பு அற்று இருக்கின்றன. உதவி செய்யக் காத்திருப்போருக்கு தேவை எங்கு இருக்கிறது என்று தெரியவில்லை. தேவையுள்ளவர்களுக்குக் கிடைக்குமிடம் தெரியவில்லை. ஆகையால் இப்பொழுது முக்கியமாகச் செய்ய வேண்டியது ஒன்றிணைப்பு.

சைவத்தையும், சைவர்கள் தவறுவதையும் குறிப்பாக மதம் மாறுவதையும் காக்க இது மட்டுமல்ல வழி. இன்னும் பல வழிகள் உண்டு. பெரிய நகரங்களில் போட்டிபோட்டுக் கொண்டு பலஇலட்சம் செலவு செய்து விழாக்கள் நடக்கின்றன. களியாட்டம் ஆடம்பரம் முதலியவற்றில் மூழ்க சில சமயங்களில் ஆண்டவனை வழிபடவே மறந்துவிடுகின்றோம். சாத்துவிகத்திற்கும் இடமே இல்லாமல் போய்விட்டது. இப்படி நகர்ப்பகுதியில் கோவிற் பூசைகளை களியாட்டம் மாதிரி கொண்டாடும் அதே வேளையில், நாட்டுப்புறங்களில் பாமரமக்கள் சென்று வணங்கக் கோவில்களே கிடையாது. இருக்கும் சிலவும் பேணுவாரற்றுக் கீலமாக உள்ளன. களியாட்டங்களுக்கும், மின்சார விளக்கு தோரணங்களுக்கும், மற்றும் சமயவழிபாட்டுக்கு அவசியமற்ற செலவுகளையும் குறைத்துக் கொண்டு அதனால் மிச்சப்படும் பொருளைக்கொண்டு தங்கள் நகரங்களைச் சுற்றிசிறுசிறு கோவில்களைக்கட்டலாம். அவற்றை அந்தப் பெரிய கோவில் நிர்வாகிகளே நிர்வகிக்கலாம். அதாவது 25 மைல் விட்டத்துக்குள் என்று வைத்துக்கொண்டு அதற்குள் இருக்கும் கிராமங்கள், தோட்டங்கள் முதலியவற்றின் கோவிற் தேவையை நகரப் பெரிய கோவில்களே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். இதனால் ஏற்படும் நடைமுறைச் சிக்கல்கள் பல இருக்கலாம். இவை நமது குறிக்கோளுக்குத் தடையாக இருக்கக்கூடாது. இது இன்று சைவத்திற்கும், சைவசமயத்தவர்களுக்கும் தலையான தொண்டாக இருக்கும்.

எந்தப் பகுதியில் எவ்வளவு சிறு ஜனத்தொகையில் சைவர்கள் இருந்தாலும் அவர்கள் தங்களுக்குள் சைவ முன்னேற்றச் சங்கம், சன்மார்க்க சங்கம், போன்ற சங்கங்களை அமைத்து வாரவார கூட்டு வழிபாடு விசேடகாலங்களில்

உதாரணமாக திருவெம்பாவை, (மார்கழிப்) பஜனை மற்றும் சமயச் சொற்பொழிவுகள், இலவச சமயபாடங்கள், சினிமாப் படங்கள் முதலியன ஏற்பாடு செய்யலாம்.

இவையெல்லாம் சாதாரணமாக நடக்க விடக்கூடியவை அல்ல. சைவமக்களில் கற்றுணர்ந்தோரும், செல்வந்தர்களும் மற்றும் செயல்வீரம் பெற்றவர்களும் சென்று சேர்ந்தோ தனித்தோ தங்களால் முடிந்த அளவு நடைமுறைப்படுத்த முயற்சிக்க வேண்டும். இப்படிச் செய்தால் அவர்கள் பிறவி எடுத்த பயனை அடைவர். அவர்கள் என்ன தொழில் செய்தாலும் பிறவிப்பெருங்கடல் நீந்தியே ஆகவேண்டும். இத் தொண்டுகள் பிறவிக்கடலை நீந்துவதை இலகுவாக்குவதுடன் அவர்கள் சந்ததியினரின் துன்பங்களும் வினைகளும் நீக்கப் பெற்று மேலோங்கிய நிலை அடையச் செய்யும் சாதனங்களாகும்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக்
சைவர்கள் இருக்குமிட மெல்லாம் ... (மன்னிக்க

## சந்நிதி விரோதம்

ஆலயங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளில் தலைமை தாங்குவது இன்னார், பேச்சாளர் இன்னார் எனக் கூறுவது மரபு அல்ல. கந்தபுராண படனம் நடக்கும் பொழுதும் பாடல்களைப் படிப்பவர் யார், பயன் கூறுபவர் யார் எனப் பெயர் கூறுவதில்லை. அப்படிக் கூறுவதை சந்நிதி விரோதம் என்பர் அறிஞர்.

# குடிசனப் புள்ளி விபரங்கள்

சென்ற மார்ச் மாதத்தில் எடுக்கப்பெற்ற குடிசன மதிப்பீட்டின் படி இலங்கையின் மொத்தச்சனத்தொகையில் இந்துக்கள் 15.5 நூற்று வீதத்தினராக உள்ளனர்.

1971-ல் இருந்ததைவிட இவ்விகிதாசாரம் 2·1 நூற்று வீதம் குறைவாக உள்ளது. இவ்வீழ்ச்சிக்குரிய காரணங்களில் மதமாற்றமும், இடம் பெயர்தலும் குறிப்பாக இந்துமக்கள் நிரந்தரமாக இந்தியாவிற்கும், தொழில் காரணமாக மத்திய கிழக்கு நாடுகள், பிரித்தானியா, கனடா, ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கும் சென்றுள்ளதும் ஆகும்.

பிரதானமான மாவட்டங்களில் உள்ள மொத்தச் சனத்தொகையில் இந்து மதத்தினரின் விகிதாச்சாரம் பின்வருமாறு உள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | யாழ்ப்பாணம் | — | 85·2 |
| 2. | வவுனியா | — | 69·3 |
| 3. | மட்டக்களப்பு | — | 66·2 |
| 4. | நுவரெலியா | — | 55·5 |
| 5. | திருகோணமலை | — | 31·8 |
| 6. | மன்னார் | — | 26·5 |
| 7. | பதுளை | — | 25·4 |
| 8. | அம்பாறை | — | 18·4 |
| 9. | கண்டி | — | 11·8 |
| 10. | இரத்தினபுரி | — | 11·8 |
| 11. | கேகாலை | — | 7·7 |
| 12. | கொழும்பு | — | 7·6 |

ஏனைய மாவட்டங்களில் இந்துக்களின் சனத்தொகை மிகக் குறைவாக உள்ளது.

# பக்தி இலக்கியங்கள்

மகாவித்துவான்: ச. தண்டபாணிதேசிகர்

இனிமையும், எளிமையுமே அன்புக்குப் பிறப்பிடம். அன்பு தமிழ்ச்சொல். பக்தி வடசொல். (1) அன்பு உடல் கொள் உயிர்க் குணம். நேயம், நார், விழைவு, கனிவு, குழைவு முதலிய சொற்கள் அன்பு என்னும் பொருளை உணர்த்துவன வாயினும் அடிப்படையான காரணங்களால் வேறுபடுவன. அன்பு என்பது மனநெகிழ்ச்சி; உலகில் உள்ள ஒவ்வொரு பொருளிடமும் காணப்படும் தனிப்பண்புகள் நம்மனத்தைக் கவரும்போது சுரக்கும் குணம்.

தாய், தந்தை, மகன், மாமன், கடவுள் யாரிடம் செலுத் தினலும் அன்பு அன்புதான் என்று கருதிய தமிழன் தனிச் சிறப்புடையவன். அவன் எங்கும் கண்டது ஒரு தன்மையை; அதனல், கனித்த உளத்துச் சுரப்பன அனைத்தையும் அன்பு என்ருன். இடம் நோக்கி மாற்றுப் பெயர் வைத்தது வடமொழி. அதில் பக்தி என்பது சிறந்த முனிவர், தாய், தந்தை, கட வுள், குரு முதலியோர்பால் செலுத்தப்பெறும் அன்பு.

## அன்பே சிவம்

இவ்வன்பு உயிர் உள்ள எல்லாப் பொருளினிடத்துங் கலந்து இருத்தலானும், இன்பத்தை விளைவித்தலானும் இத னைச் சிவம் என்ருன் தமிழன். (2) "அன்பும் சிவமும் இரண் டென்பர் அறிவிலார்" என்றுகூடச் சொல்கிருர் திருமூலர். இங்ஙனம் இறைத்தொடர்பை இயல்பாகவே உடையது அன்பு. ஆதலின் அதனை வேறு வேறு சொற்களால் குறிக்க முற்பட வில்லை தமிழ்மொழி.

## பக்தி மொழி — தமிழ்

இங்ஙனம் அன்பு என்ற சொல் தமிழர்க்கே உரியதானுற் போலக் குணமும் தமிழர்க்கே உரியது. பிரமபுராணம் வடமொ ழியில் உள்ள பதினெண் புராணங்களில் ஒன்று. அது கூறு கிறது: மூன்று பெண்கள் துவாரகைக்குப் பயணம் சென்றனர்.

வழியில் நாரதர் அவர்களைச் சந்தித்தார். "நீங்கள் யார்?" என்று வினவினர். அவர்களுள் ஒருத்தி "நாங்கள் இருப்பது திராவிட தேசம்; என் பெயர் பக்தி; இவர்கள் ஞானமும், வைராக்கியமும், இவர்கள் என் பெண்கள், நான் தாய் என்றுள். இதைக்கேட்ட நாரதர் "நீ தாயா! அவர்கள் உன் பெண்களா! உன்னைப் பார்த்தால் இளமையாக இருக்கிறதே! அவர்கள் உன்னில் மூத்த கிழவிகளாகத் தோன்றுகின்றனரே" என்றாராம்.

இதிலிருந்து அறியப்படும் உண்மை என்ன? பக்தி என்ற குணத்தின் பிறப்பிடம் திராவிடமாகிய தமிழகம் என்பது தானே! ஆகவே கனிந்த உள்ளமும், கசிவந்த சொல்லும் உடைய மொழியே பக்தி இலக்கியங்கள் தோன்ற இடந்தருவன என்பது துணியப்பெறும். இத்தகைய மொழி எது? செந்தமிழ் மொழி; அதுவே அன்பிலக்கியங்களுக்கு உரிய மொழி எனலாம்.

### அன்பு — இலக்கியங்களின் வித்து

இலக்கியங்கண்டு அதற்கு இலக்கணம் இயம்புதல் முறை. ஆனல், செந்தமிழ்க்கோ இலக்கணம் இருக்கிறது. இலக்கியங்கள் அவ்வளவாக அகப்படுதல் இல்லை. ஆதலால் தொல்காப்பிய இலக்கணம் தரும் விதையை மட்டும் ஆராயின், பாடாண்டிணைக்குரிய அறுவகை வாழ்த்தைச் சார்ந்த கடவுள்வாழ்த்தே அவர் தந்த விதை! "இதுவே உயர்ந்தது; மறுமைப் பயனைத் தருவது" என்பார் நச்சினர்க்கினியர். தன்பொருட்டானும், பிறர்பொருட்டானும் ஆக்கத்தின்மேற் காமுற்று வாழ்த்தின் அஃது அவர்க்குப் பயன் தரும் என்று கருதப்பெற்றது. ஆகவே, "அமரர்கண் முடியும் அறுவகை வாழ்த்து" என்பதே அவர் தந்த வித்து. இதனைக் கொண்டு எழுந்தன கடவுட் பாடல்கள்.

### பக்தி இலக்கியங்களின் வகைகள்

அன்றியும் "நில்லாவுலகம் புல்லிய நெறித்தே" என உலக நிலையாமையை யுணர்த்தி, அதன் வாயிலாக நிலைத்தலுடைய பொருளாகிய கந்தளி அல்லது அருவான கடவுளிடத்து அன்பைத் தோற்றுவிக்கிறது. இது காஞ்சியென்னும் புறத்திணையாகும். இதனைப் பொருளாகக் கொண்டு எழுந்த பக்தி இலக்கியம் மதுரைக்காஞ்சி.

மூன்றாவதாக, கடவுளை அல்லது கடவுளிடத்து அன்பனை ஆற்றுப்படுத்தும் ஆற்றுப்படை மருங்கினும் அன்பிலக்கியங்கள் எழுந்தன. அவற்றுள் ஒன்று திருமுருகாற்றுப்படை. இது முருகனுடைய தோற்றம், வீரம், இடம், அருட்செயல் முதலியவற்றைத் தொகுத்துச் சொல்லி நம்மனத்தில் அன்பு சுரக்கச் செய்கிறது.

நான்காவது பரிபாடல். இது இன்பத்தையே பொருளாகக்கொண்டு வரும் கடவுள் வாழ்த்து ஆகும். இது முருகன், திருமால், பலதேவன் முதலிய தேவர்களின் திருவுருவ அமைப்பையும் வழிபாட்டு முறையையும் வகுப்பது.

சிலம்பில் ஞாயிறு வாழ்த்து, திங்கள் வாழ்த்து, மாமழை வாழ்த்து என்ற வகையில் உருக்கொண்டு, நூலிடையிலே திருமால், சிவன், இந்திரத்தெய்வம் முதலியவற்றைப் பாராட்டும் பாடல்களாக விரிந்து பரந்தன. சிந்தாமணியிலே அருக தேவர் வாழ்த்தாகவும், அவர் உதவும் ஞானச் சிறப்பைப் பாராட்டும் பாடல்களாகவும் அரும்பின.

மணிமேகலை முதலிய நூல்கள் முழுதும் சமயத் தத்துவக்கொள்கைகளை விளக்குவனவாக அமைந்தனவேயன்றிப் பக்தியை விளக்கும் இலக்கியங்களாக வளரவில்லை எனலாம்.

பின்பு சங்க நூல்களில் எட்டுத் தொகையின் தலைப்பாட்டாகத் திகழும் பக்திப் பாடல்களைப் பார்க்கிறோம். அவை இறைவனுடைய பொது இயல்பு, திருமேனியமைப்பு, உடையணிமாலை இவற்றின் தோற்றம். இவற்றைக் கூறி, உள்ளக் கிழியில் உரு எழுதுகின்றன. "உலகம் ஏமவைகல் எய்தின்று". "மூவகையுலகமும் முகிழ்த்தன முறையே", "தாவில்தாழ் நிழல் தவிர்ந்தன்றால் உலகே" எனப் பயனையும், எல்லாவற்றையும் தன்னகத்தடக்கிக் காக்குந் தலைமையும் குறிக்கின்றனவாகப் பக்திப் பாடல்களாயின.

புறநானூறு முதலிய புறப்பொருள் இலக்கியங்களிலே, புலவர்கள் தம்மைப் புரந்த புரவலரது நன்றியை வியப்

பாராக "இறைவன் இவர்கட்கு நலம் பல தந்து காக்க" என்ற வாயுறைப் வாழ்த்தும், பக்திப் பாடல்களாக அமைந்தவையே. திருக்குறளிலே கடவுளை வாழ்த்துதல் தனிமனிதனுடைய அறம் என்ற முறையில் விதியாக வளர்ந்தது.

## சமயச் சார்பால் பக்திப் பாடல்கள் வளரல்

சமண பௌத்த வளர்ச்சிக் காலத்தே அருகனைப் பற்றியனவும், புத்தர் பெருமானைப் பற்றியனவுமான வரலாறுகளை அடியாகக்கொண்ட பக்திப்பனுவல்கள் தோன்றின. அவற்றுள் இன்றிருப்பன சிந்தாமணியும், சூழாமணியும், சிலப்பதிகாரமும், யாப்பருங்கலம், தொல்காப்பியம் இவற்றின் உரையில் வரும் சில பாடல்களும் ஆம்.

பின்னர் கி. பி. 3ஆம் நூற்றாண்டு முதல் 9ஆம் நூற்றாண்டு வரை வரலாறு இலக்கியங்களின் வளர்ச்சி சிறிது குறைந்து அன்புநெறி இலக்கியங்கள் ஆக்கம்பெற்றன எனலாம். இந்தக் காலமே சமயாசாரியர்களும், ஆழ்வார்களும் தோன்றிப் பக்திப் பனுவல்களைப் பலவாக இயற்றிய காலம். பக்தியிலக்கியங்கள் பதினாயிரக் கணக்கில் பதிகங்களாகவும் பத்துக்களாகவும் குவிந்தன. இக்காலத்தெழுந்த இலக்கியங்களில் பக்திச்சுவை மக்கள் உள்ளத்தே நிலைக்க இறையியல்பேயின்றி, இறைவன் அவ்வப்போது மக்களுக்குச் செய்த உபகாரம், வீரச் செயல்கள் அருட்செயல்கள் முதலிய புராண வரலாறுகளும் கலந்தூட்டப்பட்டன. அதனால் படிப்பவர் மனமும், பக்கம் நின்று கேட்பவர் மனமும் பரவசப்பட்டன.

## இறைவனை அணுகும் முறைகள்

இறைவன் ஆண்டான்; நாம் அடிமை என்ற அநுபவத்தெழுந்த இலக்கியங்களின் போக்கு முதிர்ந்து, இறைவன் என் தோழன், இறைவன் என் தாய், என் தந்தை என்ற உறவின் முறையில் வைத்து அநுபவிக்கும் பக்திப் பனுவல்களாகவும் அமைந்தன.

பின் அந்நிலையும் முதிர்ந்து, இறைவன் என் காதலன் என்ற முறையில் போற்றப்பெறும் அநுபவமும் உண்டாயிற்று. இதற்கு அடிப்படையான வித்து தொல்காப்பியம் சொல்லும்

கடவுள் மாட்டுக் கடவுட் பெண்டிர் நயப்பும், கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயப்புமான இருபுறத் துறைகளே எனலாம். இதன் விளைவே நாயன்மார்களும், ஆழ்வார்களும் நாயகன் நாயகியாகப் பாவித்துப் பரவும் பக்திப்பாடல்களின் தோற்றம்.

இதன் முதிர்ச்சி திருக்கோவையாரில், இறைவனை நுகரப்படும் பொருளாகிய தலைவியாகவும், தான் நுகர்வோனாகிய தலைமகனாகவும் இருந்து அநுபவிக்கும் நிலையாக மாறிற்று. இதனால் எழுந்தன பல கோவைப் பிரபந்தங்கள். பின்பு சந்தமும் — வண்ணமும் குழிப்புமாகிய (ஜதிப்) பாடல்கள் பக்தியைப் பரப்புங் கருவிகளாயின. அதனால் அருணகிரிநாதர் பக்திப் பனுவல்களின் அமைப்பை மாற்றினார். அவர் செய்தன திருப்புகழ்.

பின்பு, மக்களுக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பை விளக்கும் வரலாற்று நூல்களாகிய பல புராண இலக்கியங்கள் பக்திப் பனுவல்களாக மலர்ந்தன.

கடவுள் தொடர்பு "குழவி மருங்கினும் கிழவதாகும்" ஆதலால், தெய்வங்களைக் குழந்தைகளாகப் பாவித்துப் பாடப்பட்ட பிள்ளைத் தமிழ் நூல்கள் பிறந்தன. இரட்டை மணிமாலைகள், மும்மணிமாலைகள், மும்மணிக்கோவைகள், நான்மணிமாலைகள், அந்தாதிகள் எல்லாம் பக்திப்பனுவல்கள்.

இத்துணை நூல்களும் அன்புச் சுவையை மட்டும் அளிப்பன ஆதலால் மக்கள் மனம் அவ்வளவில் அமையவில்லை; ஏனைய கலப்புச் சுவையை விரும்புவதாயிற்று. அதனால் காதல் உரையாடல், இழிசினர் காதல், வீரம் முதலியனவும் கலந்த கலம்பகங்கள் எழுந்தன.

இவை அனைத்தும் உயர்ந்த நடையில் செந்தமிழ்த் திறம் குன்றாது இயற்றப்பட்டவை. உலகம் எளிய நடையில் ஆழமான பொருளமைதியையுடைய புரட்சிகரமான கவிதைகளை விரும்பிற்று. அந்த நிலையில் சாதி, சமய சாத்திரச் சழக்கற்ற, தேன்போலும் இனிய பக்திப் பனுவல்கள் பல வற்றைப் படைத்து உதவினார்கள் வடலூர் இராமலிங்க வள்ளலார்.

நாம் வாழும் இந்த நூற்றூண்டிலே மகாகவி சுப்பிரமணிய பாரதியார் கண்ணன் என் காதலி, கண்ணன் என் தோழன், ஓம் சக்தி, முத்துமாரியம்மன் முதலான பல பனுவல்களைத் தந்து பக்தி இலக்கியப் பண்பை வளர்த்தார்.

இன்றும் எத்தனையோ பதிகங்கள், பத்துக்கள், உலாக்கள் எழுந்து அன்பு நெறியை வளர்க்கின்றன.

''சொல்லியவே சொல்லி ஏத்துகத்தல்'' இறைவன் இயல் பாதலின் இறைவன் புகழ்மாலைகளாகிய பக்திப்பனுவல்கள் மன பரிபாகத்திற்கு ஏற்ற சிறந்த துணையாக வளர்ந்து வருகின்றன.

நன்றி: ''தினமணி''

# நல்லூரான் கிருபை வேண்டும்

நல்லூரான் கிருபை வேண்டும் — வேறென்ன வேண்டும்
நமைப்பிரி யானென நம்பிட வேண்டும்
(நல்லூரான் கிருபை வேண்டும் - வேறென்ன வேண்டும்)
எல்லா ரிடத்தும்அவன் இருப்பதைக் காணவேண்டும்
கொல்லாமை கள்ளாமை கோபத்தை நீக்கவேண்டும்
(நல்லூரான் கிருபை வேண்டும் - வேறென்ன வேண்டும்)
சொல்லும் பொருளுமற்றுச் சும்மா விருக்கவேண்டும்
அல்லும் பகலுமவன் அடியிணையே தொழவேண்டும்
(நல்லூரான் கிருபை வேண்டும் - வேறென்ன வேண்டும்)
உல்லாசமாக உலகிற் றிரிய வேண்டும்
ஓம்சிவாய நமவென ஓதிக்கொள்ள வேண்டும்
(நல்லூரான் கிருபை வேண்டும் - வேறென்ன வேண்டும்)
பல்லோர்புகழ் நல்லூர்ச் செல்லப்பன் பாதத்தை
பக்தியாய் கும்பிட்டுப் பாடிட வேண்டும்
(நல்லூரான் கிருபை வேண்டும் - வேறென்ன வேண்டும்)
சொல்லும் யோகசுவாமி தோத்திரப் பாடலை
எல்லோரும் கேட்டு மகிழ்ந்திட வேண்டும்.
(நல்லூரான் கிருபை வேண்டும்)

— நற்சிந்தனை

# முருகப்பெருமானும் சத்திகளும்

எந்த ஒரு பொருளுக்கும் இரு கருத்துக்கள் உண்டு. ஒன்று செம்பொருள், அதாவது பொருள் குறிக்கும் கருத்து; மற்றது செம்பொருள் அதாவது குறிப்புப் பொருள்.

இந்தத் தத்துவத்தின் அடிப்படையிலேயே முருகனுக்கு தெய்வானை, வள்ளி ஆதியாம் சக்திகள் கூறப்படுகின்றன. அத்துடன், வேலும் ஒரு சத்தியாகக் கொள்ளப்படுகிறது.

நெருப்பு ஒன்ருக இருந்தாலும் சுடுதல், விளக்சங்கொடுத்தல், சமைத்தல் முதலிய தொழில்கள் பலவாகும். எனவே சத்தி ஒன்றே ஆனுல் பெயர்கள் பல.

ஆன்மாக்களுடைய கர்மங்களையும், அக்கர்மங்களுக்கீடாகிய தனு, கரண, புவன போகங்களை உபாதானத்திரயத்தினின்றும் தோற்றுவிக்கும் முறையை அறிதல் ஞானசக்தியாகும். அவ்வான்மாக்களுக்குக் காம, சமத்துவம் பிறப்பிக்கும் பொருட்டுக் கர்மங்களைப் பக்குவா பக்குவமறிந்து கூட்டிப் புசிப்பித்துத் தொலைப்பித்தல் கிரியா சத்தியாகும்.

ஆன்மாக்களை முத்தியிலடைவிக்க விரும்புதல் இச்சா சத்தியாகும். இவற்றையே, புராணங்களில் வேலாயுதம், வள்ளியம்மை, தெய்வயானையம்மை எனக் கூறப்படுகிறது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் பின்வரும் வண்ணம் கூறுகிருர்:-

**நாவலர் பெருமான் (சுப்பிரபோதம்).**

சிவன் பார்பதிதேவியைப் புணர்ந்தார், பிரிந்தார், என்பனவற்றிற்கும் கந்தசுவாமி தெய்வயானையம்மை, வள்ளியம்மை என்னும் பெண்களிருவரைப் புணர்ந்தார் என்பதற்கும் பொருளென்னையெனிற் கூறுதும்: ஆண், பெண், அலி என்னும் மூன்றுமல்லாத அநாதிமலமுத்த பதியாகிய சிவத்

தையே சர்வான்மாக்களையும் தோற்றுவித்தலால் ஆண்பாற் படுத்தும் பிதாவெனவும் சூரியனுக்குக் கிரணம் போல அச் சிவத்துக்கு அபின்னமாயுள்ள சத்தியையே நிமித்த காரண மாகிய அச்சிவம் அத்தொழிலியற்றுவதற்குத் துணைக்கா ரணமாயிருத்தலால் பெண்பாற்படுத்து மாதாவெனவும், அச்சிவம் அச்சத்தியோடுகூடி உத்தியோகித்துச் சங்கற்பித் தலையே அவ்வான்மாக்களது தோற்றத்துக்குக் காரணத்தொ ழிலாகையால், உகந்து புணர்தலெனவும், அச்சங்கற்பம் இல் லாமையையே பிரிதல் எனவும் சொல்லியதென்றறிக.

இனி அக்கினி சக்தி ஒன்றுய வழியும், சுடப்படுவதும் விளக்கப்படுவதும், அடப்படுவதுமாகிய விஷயத்தில், சூடு விளக்கம் அடுகலாகிய தொழிலின்றைற் பலவாதல் போல, கந்த சுவாமியினது சத்தி ஒன்றுய வழியும் கிருத்திய பேதத்தால் இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தியென மூவகைப்படும். அவற்றுள் இச்சாசத்தியாவது ஆன்மாக்களை முத்தியிலடை விக்க விரும்புதல், ஞானசத்தியாவது அவ்வான்மாக்களுடைய கர்மங்களையும் அக்கர்மங்களுக்கீடாகிய தனு, கரண, புவன போகங்களை உபாதானத்திரயத்தினின்றும் தோற்றுவிக்கும் முறைமையையும் அறிதல்; கிரியா சத்தியாவது அவ்வான் மாக்களுக்குக் காம சமத்துவம் பிறப்பிக்கும் பொருட்டுக் கர் மங்களைப் பக்குவா பக்குவமறிந்து கூட்டிப் புசிப்பித்துத் தொலைப்பித்தல், கந்தசுவாமிக்கு இம்மூன்று சக்திகளுமே புராணங்களில் முறையே வள்ளியம்மை வேலாயுதம் தெய்வ யானையம்மையெனக் கூறப்பட்டன. சைவாகமங்களை ஓதி யுணராதார் இவற்றினுண்மைப் பொருளை யுணராது மயங் குவார்கள்.

இத்தேசத்தில் தேவாலயங்களனைத்தினும் வருஷந்தோ றும் கந்தபுராணம் பிரசரிக்கப்படினும் பிரசாரகர்கள் பெரும் பான்மையும் சைவாகமவுணர்ச்சியில்லாதவராகையால் உண் மைப் பொருள் பரவா தொழிந்தது. செம்பொருளாகிய சிற்றின்பப்பொருளே உண்மைப் பொருளென்று பிரசரிக்கை யால் பெருங்கேடு விளைந்தது.

உ
சிவமயம்

**கந்தபுராணம் - நூற் பயன்**

இந்திர ராகிப் பார்மே லின்பமுற் றினிது மேவிச்
சிந்தையி னினைந்த முற்றிச் சிவகதி யதனிற் சேர்வர்
அந்தமி லவுணர் தங்க ளடல்கெட முனிந்த செவ்வேற்
கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தோது வோரே.

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான்

எழுதிய

# கந்தபுராண வசனம்

## நாவலர் சபையால்

பல்லாயிரம் ரூபா செலவில் வெளியிடப்பெற்ற

★ **புதிய பதிப்பு** ★

**விலை : ரூபா 75-00**

நல்லூர்க்கந்தன் உத்ஸவத்தை முன்னிட்டு
பூங்காவனத் திருவிழா வரை
இந்நூல் விசேஷ சலுகை விலையாகிய

**ரூபா 60/-க்கு**

பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

1. நாவலர் மணிமண்டபம்
   நல்லூர்.
2. "திருவருள்" சைவசமய சஞ்சிகை
   விற்பனையகம்

   திரு. க. இளையதம்பி
   30, வைமன் வீதி, நல்லூர்.

சிந்தனையாளர் - ஆராய்ச்சியாளர்களுக்கு
அரியதோர் விருந்து

"யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்," நாவலர் பெருமான் எண்ணிய, நடைமுறைப்படுத்திய தருமங்களில் ஒன்றாகும் - இல்லை - பிரதிபலிப்பாகும்.

இப்பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர், கலாநிதி க. கைலாசபதி அவர்களின் தலைமையில் முப்பத்துமூன்று விரிவுரையாளர். பேராசிரியர், கலாநிதிகளின் அரிய ஆராய்ச்சிக்கட்டுரைகளைத் தன்னகத்தே கொண்டு, யாழ். பல்கலைக் கழகத்தின் கன்னிப் படைப்பாய் வந்துள்ளதே!

# நாவலர் நூற்றாண்டு மலர் 1979

கிடைக்கப்பெற்று விட்டீர்களா? இதுவரை கிடைக்கப்பெறவில்லையானால் கீழ்க்காணும் முகவரிக்கு வருகைதந்து பெற்றுக்கொள்ளுங்கள். பிரதிகள் நூற்றுக்குக் குறைந்த அளவே இருக்கின்றன.

பிரதியின் விலை ரூபா **50/- (ஐம்பது)**

"திருவருள்" சைவசமய சஞ்சிகை விற்பனையகம்
30, வைமன் வீதி — நல்லூர்
யாழ்ப்பாணம்.

கலியுகவரதனும்
கந்தப்பெருமானின்
நல்லூர்த் தேர்த்திருவிழா
கண்டு
இகபரசுகம் பெறுவோமாக!

# நியூ கிருபா ஸ்ரோர்ஸ்

23, கபோஸ் லேன் — கொழும்பு-11.

தொலைபேசி: 27900

வேலைத் தூக்கிவினை யாடுந் தெய்வமே — யென்
வினைப்பகை தீர் தெய்வமே

— யோகசுவாமிகள்

VENGATESHWARA

93, Keyzer Street,

**COLOMBO - 11**

Telephone: 24588

**வெங்கடேஸ்வரா**

**93, கெய்சர் வீதி**

**கொழும்பு-11,**

தங்கள் திருப்தியே எங்கள் மகிழ்ச்சி

RENUKA INDUSTRIES

Importers, Exporters & Manufacturers of
Aluminium wares

170, 172, Old Moor Street,
COLOMBO-11.

Telephone: 35579

" வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல".

இறைவன் இணையடிகளை நினைப்பார்க்கு
என்றும் துன்பமில்லை.


# K. Sundaram & Co.

**Davee's Enterprise**

**No. 83, Mihindu Mawatha**

**COLOMBO-12**

தோகைமேல் உலவுங் கந்தன்
சுடர்க்கரத் திருக்கும் வெற்றி
வாகையே சுமக்கும் வேலை
வணங்குவது எமக்கு வேலை.

— பாரதியார்

# K. பாலகிருஷ்ணன்

312, நீர்கொழும்பு வீதி,

பேலியாகொண்ட.

தொலைபேசி எண் : **070 — 284**

வெற்றி வடிவேலன் — அவனுடை
வீரத்தினைப் புகழ்வோம்
சுற்றி நில்லாதேபோ — பகையே!
துள்ளி வருகுதுவேல்.

— பாரதியார்

★ ★ ★


## ஸ்ரீநிவாசன்ஸ் கோ., லிமிற்றெற்

— ஏற்றுமதியாளர்கள் —

102, குமார வீதி — கொழும்பு - 11

தபாற்பெட்டி எண் — 673 தொலைபேசி: 24843

டெலெக்ஸ்: 21244 26575


திருவருள் கிடைக்கும் இடங்கள்:

சிங்கப்பூர்: திரு. K. அம்பலவாணர் அவர்கள்
1011. G Lange Road, Singapore 19-54.

அவுஸ்திரேலியா: திரு. ச. சண்முகமணி அவர்கள்
11, Melville St., West Ryde, New South Wales, 2114

இந்தியா: திரு. T. பாலசுப்பிரமணியம் அவர்கள்
13, வீரப்பன் தெரு, திருமங்கலம், மதுரை மாவட்டம்


Printed at The Vipulananda Press, 218/5, K. K. S. Road, Jaffna & Published by Mr. R Vaithamanithy of No. 5, Brassfounder's Street, Colombo-13, for and on behalf of Thiruvarul Association Chief Editor Mr. V. Sathasivam M. A. 15-8-81.